# சூத்திரம்

www.sooddram.com

The Formula

[செய்திகள்](#) | [கட்டுரைகள்](#) | [வடக்கு கிழக்கு மாகாணத்தில்](#) | [எழுத்துரு](#) | **Contact us at: sooddram@gmail.com**

~~ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அறுதிப் பெரும்பான்மை பெற்றது! ஜனநாயக~~

சூத்திரம்
முதற்பக்கம்
FONTS/எழுத்துரு
சர்வதேச நேரம்
தொடர்புகளுக்கு
கட்டுரைகள்
பொதுவிடயம்
அரசியல் சமூக ஆய்வு
இலங்கைத் தமிழர் போராட்டம்
இலங்கையில் உள்ள ஏனைய அரசியல் அமைப்புகள்
சர்வ தேச அரசியல்
அரசியல் தீர்வு
கவிதைகள்
சமூக விழிப்பு
போராட்டம்
பொது விடயம்
புகைப்படங்கள்
எமது வாழ் நிலங்கள்
போராட்டங்கள்
போராட்ட தடயங்கள்
இணையத்தளங்கள்
கண்ணோட்டம்
பூந்தளிர்
தூ
தேனி

சித்திரை 03, 2010

## 1990 முதல் 2009 வரை அட்டைகளின் (புலிகளின்) ஆட்சியில்......

*நடந்த வன்கொடுமைகள்! (பகுதி 26)*

(கிறேசியன், நாவாந்துறை)

பலவகையான வார்த்தைகளைப் பயன்படுத்தி சலீம் முயற்சித்து உண்மைகளைக் கண்டறிய பெரும்பாடுபட்டார். அனைவரும் தெரியாது என்றே கூறினர். அவரைப் பிடித்து வந்து உண்மையை எடுக்கிறேன் என்று கூறிச் சென்றார் சலீம். அந்த ஈ.பி.ஆர்.எல்.எப். இளைஞர் திருகோணமலையைச் சேர்ந்தவர். இருபாலைப்பகுதியைத் தெரிந்திருக்க வாய்ப்பு குறைவு. அப்படியிருந்தும் அவர் தப்பிச் சென்றது ஓர் அதிசயமான துணிச்சலான செயல்தான். நான் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவன். எனக்குக் கூட அப்படி ஓர் எண்ணம் வரவில்லை. யாழ்ப்பாண இடங்களைத் தெரியாத அந்த இளைஞன் இங்கே இருந்து தப்பிக்க முடிவெடுத்தது ஓர் சரியான முடிவாகத்தான் இருக்கும்.

திருகோணமலையிலிருந்து யாழ்ப்பாணம் வந்து தன்னை மீட்டுச் செல்ல தனது உறவினர்களால் முடியாது என்பதை அவர் தெரிந்து வைத்திருந்தார். எங்களுக்கென்றாலும் எங்கள் உறவினர்கள் யாழ்ப்பாணத்தில் இருக்கின்றனர். அவர்கள் எப்படியும் புலி விலங்குகளுக்கு தொல்லைகள் கொடுத்துக்கொண்டே இருப்பார்கள். அதனால் எங்களை விடுவிக்க குறைந்த அளவு வாய்ப்புகள் உள்ளன. ஆனால் கிழக்கு மாகாண இளைஞர்களுக்கு அப்படி எந்தக் குறைந்த அளவு நம்பிக்கை கிடையாது. எனவே இந்த இளைஞன் எப்படியும் இறைச்சிக்கடைக்கு அனுப்பப்பட்டு

**உனக்கு நாடு இல்லை என்றவனைவிட நமக்கு நாடே இல்லை என்றவனால்தான் நான் எனது நாட்டை விட்டு விரட்டப்பட்டேன்.......**



ராஜினி திரணகம
MBBS(Srilanka)
Phd(Liverpool, UK)

**"அதிர்ச்சி ஏற்படுத்தும் சாமர்த்தியம் விடுதலைப்புலிகளின் வலிமை மிகுந்த ஆயுதமாகும்.** விடுதலைப்புலிகளுடன் நட்பு பூணுவது என்பது வினோதமான சுய தம்பட்டம் அடிக்கும் விவகாரமே. விடுதலைப்புலிகளின் அழைப்பிற்கு உடனே செவிமடுத்து, மாதக்கணக்கில்

ஈழச் சுவர்
தமிழ் நியூஸ் வெப்
பத்மநாபா
மலையகம்
பார்வை
அலை
தாயகம்
ஈழநாசம்
நெருப்பு
அதிரடி
அதிரடி மீடியா
ஈ.பி.ஆர்.எல்.எவ்.
ஆனந்தசங்கரி
விழிப்பு
ரெலோ நியூஸ்
உதயம்
தேனகம்
புளொட்
ஈபிஆர்எல்எவ் வெப்
விடிவெள்ளி
எங்கள் பூமி
இலங்கை கம்யூனிஸ்ட்
எங்களைப்பற்றி
General

கொல்லப்படுவார் என்பதை அறிந்து இப்படி ஓர் முயற்சியில் இறங்கி தப்பித்துள்ளார். அதிஷ்டத்தை நம்பி காத்திருக்காமல் முயற்சித்துப் பார்ப்போம் என்று துணிந்த அந்த இளைஞன் பாராட்டப்படாமல் இருக்க முடியவில்லை. அந்த இளைஞனைக் கடைசிவரை புலிகளால் பிடிக்க முடியவில்லை! இந்த நிகழ்வுக்குப் பிறகு புலிகளது வீராவேசப் பேச்சுக்கள் குறைந்தன. ஆனால் சித்திரவதை செய்யும் ஆற்றலை அதிகரித்தனர்.

தப்பித்து ஓடிய இளைஞனை மனதில் வைத்துக்கொண்டு பிடித்து வரும் புதிய இளைஞர்களைக் கடுமையாகத் தாக்கத் தொடங்கினர் புலிகள். காலுக்கு மட்டும் விலங்கு மாட்டினால் போதாது. இவர்கள் எல்லோருக்கும் கைகளுக்கும் விலங்கு மாட்ட வேண்டும் என்று சின்னக்கேடி வற்புறுத்தினார். சலீமுக்கு என்ன தோன்றியதோ தெரியவில்லை, அவர் அதற்கு சம்மதிக்கவில்லை!

கைகளில் விலங்குடன் இருக்கும் நடராஜ் அவர்கள் இரவு வேளையில் தினமும் ஏதாவது பழைய சினிமாப் பாடல்களைப் பாடுவார். இந்த இளைஞன் தப்பி ஓடிய மூன்று நான்கு நாட்கள் கழித்து அவரது பாடலை ஆரம்பித்தார். “சட்டி சுட்டதடா கை விட்டதடா” என்ற பாடல் வரியில் “ஆட்டி வைத்த மிருகம் இன்று அடங்கிவிட்டதடா” என்று உரத்தக் குரலில் பாடினார். காவலுக்கு நின்ற புலிக்கு கோபம் வந்தது. எங்களைத் தானே சொல்கிறாய் என்று நடராஜ் அவர்களை இழுத்து வெளியில் போட்டு அடித்தனர்.

நடராஜ் அவர்களும் விடுவதாக இல்லை. ஓமடா உங்களைத்தான் சொன்னேன்! அந்தப் பொடியன் வீரனடா. நீங்கள் விலங்கு போட்டு அடிக்கும் கோழைகளைடா! என்று திரும்பத் திரும்பக் கூறிக்கொண்டே இருந்தார். இவர்களை அடிப்பதைப் பற்றி அவர் கவலைப்படவே இல்லை. எந்த விபரீதம் நேர்ந்தாலும் தான் நினைப்பதைச் சொல்லி முடிக்கும் மனபலம் அங்கிருந்தவர்களில் நடராஜ் அவர்களுக்கு மட்டுமே இருந்தது!

சின்னக்கேடியுடன் நிழல் போல வரும் திசை என்பவருக்கு ஒரு விசேட குணம் ஒன்று உண்டு. அவர் எப்போது உள்ளே வந்தாலும் இரண்டு சகோதரர்களை சுவரின் மீது சாய்ந்து நிற்கும்படி கூறி அவர்களது மார்பில் கைகளால் குத்துவார். மார்புப்பகுதி சற்றுத் தூக்குதலாக இருந்தால் கண்டிப்பாக திசை குத்துவார். நேராக நெஞ்சில் குத்தமாட்டார். கைகளை முகத்துக்கு மேலே தூக்கி மேலிருந்து கீழாகக் குத்துவார் இரண்டு கைகளாலும். ஓர் கோமாளித்தனமான குத்துக்களாக இருக்கும் அவரது குத்துகள். அவருக்கு அதில் ஓர் பேரின்பம் இருந்தது. அங்கு இருந்த 15 மாதங்களில் இருபது தடவைக்கு மேல் இவ்விதமான குத்துக்களை நான் பெற்றுள்ளேன்.

அவர்களின் குழுக்களில் இருந்து ஆலோசனை வழங்கி, கடிதங்கள் வரைந்து, கூட்டங்களில் பேசித்திரிந்து, அவர்களுக்கு அடிவருடிகளாக இருந்தவர்கள்மீது கூட சூசகமான எச்சரிக்கைகள், காலப்போக்கில் அவர்கள்மீது சந்தேகம் கொண்டு விடப்பட்டன………”

(முறிந்த பனை நூலில் இருந்து)

(இந் நூலை எழுதிய ராஜினி திரணகம விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவின் முக்கிய உறுப்பினரான பொஸ்கோ என்பவரால் 21-9-1989 அன்று யாழ் பல்கலைக்கழக வாசலில் வைத்து சுட்டு கொல்லப்பட்டார்)

Its capacity to shock was one of theL.T.T.E’smost potent weapons. Friendship with theL.T.T.E. was a strange and self-flattering affair.In the course of the coming days dire hints were dropped for the benefit of several old friends who had for months sat on committees, given advice, drafted latters, addressed meetings and had placed themselves at the L.T.T.E.'s beck and call.

From: Broken Palmyra

[***இலங்கையின் 7 வது பாராளுமன்றத் தேர்தல்!***
நடக்கும் என்றார் நடந்து விட்டது! நடக்காது என்றார் இனி நடந்துவிடுமா?]

நீண்ட நாட்களாக இந்தச் சிறையில் நடப்பவற்றை நான் கவனித்துக்கொண்டிருந்தேன். பலர் வருவதும் அடி உதைகள் என்று வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டுக்கொண்டிருந்தனர். என்னை விசாரணைக்கென்று அழைக்கவே இல்லை. எதற்காக வைத்துக்கொண்டிருக்கின்றனர் என்ற கேள்வி என்னுள்ளேயே எழுந்தது. இதுபற்றி நான் யாரிடத்திலும் கேட்க முடியாது. அப்படி கேட்டுவைத்தால் வம்பை விலைக்கு வாங்கியதாகிவிடுமோ என்ற பயமும் இருந்தது. அதனால் எனது வாயை நானே கட்டுப்படுத்திக் கொண்டேன்.

என்னுடன் இருந்தவர்களில் பலர் நோய்வாய்ப்பட்டிருந்தனர். இந்த முகாமில் எந்தவித மருந்தும் கிடையாது. காய்ச்சல் தலைவலி, வயிற்றோட்டம் எது வந்தாலும் உணவு இல்லாமல் பட்டினி கிடந்துதான் நோயைக் குணப்படுத்த வேண்டும். இங்கே இருந்த ஒரே மருந்து வின்ரோஜன்தான். இரண்டு சகோதரர்களுக்கு வயிற்றோட்டம் ஏற்பட்டது. காலை மாலை இருவேளை தவிர ஏனைய நேரங்களில் எந்தக் காரணம் கொண்டும் கழிவறைகளுக்கு அனுமதிக்க மாட்டார்கள். துணுக்காயில் அதற்காக சொப்பின் பைகள் கொடுத்தனர். இங்கு எதுவும் இல்லை.

ஒரு சகோதரனுக்கு இரவு வயிற்று வலி ஏற்பட்டு மலம் கழிக்க வேண்டும் என்று அவதிப்பட்டார். எவ்வளோவோ மன்றாடிக் கேட்டும் புலி விலங்குகள் இரங்கவில்லை. அந்தச் சகோதரனை அடக்கிக் கொள்ள முடியவில்லை அப்படியே சறத்துடன் மலம் கழித்துவிட்டார். எனது அறையில் அப்போது ஆறுபேர் இருந்தோம். நிலத்திலும், அவரது சறத்திலும் கொட்டிவிட்டது. கழுவுவதற்காக தண்ணீர் கேட்டோம். தரமறுத்துவிட்டனர். மறுநாள் காலைவரை உறக்கமில்லாமல் அதனுடனேயே அனைவரும் இருந்தோம். காலையில் தண்ணீர் எடுத்து வந்து நிலத்தையும் கழுவி அவரது சறத்தையும் கழுவினோம்.

இதே போன்று அருகில் இருந்த அறையிலும் ஒருநாள் நடந்தது. நல்லவேளை எனக்கு இப்படி ஓர் நிலை ஏற்படவில்லை என்று நினைத்திருந்த வேளை எனக்கும் அந்தத் தண்டனை தானாக வந்தது.

ஒரு நாள் இரவு 1 மணியளவில் எனது வயிறு முறுகியது. அதனைத் தொடர்ந்து வெளியேறும் உணர்வு அதிகரித்தது. காவலுக்கு நின்ற புலியிடம் கதைத்துப் பார்த்தேன். வாயை மூடிக்கொண்டு கிடவடா என்று ஆலோசனை வழங்கினார். ஏற்கனவே எனது அறை நாற்றம் எடுத்தது நினைவுக்கு வந்தது. எப்படிச் சமாளிப்பது என்று பல ஆராச்சிகள் செய்தேன் எதுவும் தென்படவில்லை. இறுதியாக ஓர் முடிவுக்கு வந்தேன்.

எனது சறத்தைக் கிழித்துப் பயன்படுத்துவதென்று

(சாகரன்)

வெல்லப்போவது யார்.....? பாராளுமன்றத் தேர்தல் 2010

(சாகரன்)

*பாராளுமன்றத் தேர்தல் 2010*

தேர்தல் விஞ்ஞாபனம் - *பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி*

1990 முதல் 2009 வரை அட்டைகளின் (புலிகளின்) ஆட்சியில்......

*நடந்த வன்கொடுமைகள்!*
(கிறேசியன், நாவாந்துறை)

***சமரனின் ஒரு கைதியின் வரலாறு***

***"ஆயுதங்கள் மேல் காதல் கொண்ட மனநோயாளிகள்."***
**வெகு விரைவில்...**

மீசை வைச்ச சிங்களவனும் ஆசை வைச்ச தமிழனும்

(சாகரன்)

*இலங்கையில்*

'இராணுவ' ஆட்சி வேண்டி நிற்கும் மேற்குலகம், துணை செய்யக் காத்திருக்கும் சரத் பொன்சேகா கூட்டம்

(சாகரன்)

*ஜனாதிபதி தேர்தல்*

எமது தெரிவு எவ்வாறு அமைய வேண்டும்?

-பத்மநாபா ஈபிஆர்எல்எவ்

*ஜனாதிபதித் தேர்தல்*

முடிவெடுத்தேன். அதன்படி சறத்தைக் 2X1/2 அடி அளவில் பல்லால் கடித்துக் கிழித்து எடுத்து அதனை இரண்டாக மடித்து அதன் மீது மலம் கழித்தேன். அதற்கு முன்னர் கூட இருந்தவர்களை மறுபக்கம் திரும்பி அமரும்படி கூறி மன்னித்துக் கொள்ளும்படி கேட்டுத்தான் கழிவை அகற்றினேன்! முன்னர் ஏற்பட்டது போன்று கட்டுப்பாட்டை இழந்து அறையில் நாற்றம் ஏற்படுத்தவில்லை. கழித்த மலத்தை அப்படியே சுருட்டி ஓர் மூலையில் வைத்துவிட்டு உறங்கினேன். முதலில் அறையினுள் நாற்றம் இருந்தாலும் பின்னர் நாற்றம் போய் அனைவரும் உறங்கினோம்.

மறுநாள் காலை கதவைத் திறக்க வந்த புலிக் காவலாளி ஏனடா இரவு கூப்பிட்டனி என்று கேட்டு காலால் உதைத்தார். இவரது பெயர் பாபு. இவர் பூனகரியைச் சேர்ந்தவர். ரொயிலற் வந்தது அதனால்தான் கூப்பிட்டேன் என்று பதில் கூறியதற்கு மீண்டும் ஒரு உதை விட்டார். இவை பழகிப்போன உதைகள்தானே எங்களுக்கு! இந்தச் சம்பவம் நடந்து பத்து மாதங்களும் நான் அந்த கிழிந்துபோன சறத்துடன்தான் வாழ்ந்தேன்.

சிங்களவர் கூட இந்த அளவுக்குத் தமிழர்களை வதைத்திருப்பார்களா என்பது சந்தேகமே. சிங்களவரது சிறையிலிருந்து பலரை நான் விசாரித்துப் பார்த்தேன். ஆண்டு கணக்காக கால்களுக்கு விலங்கிட்டு, கைகளுக்கு விலங்கிட்டு, குழிகள் வெட்டி அதனுள் இறக்கிவைத்து, தினமும் அடித்துச் சித்திரவதை செய்து தமிழர்களைக் கொடுமைப்படுத்திக் கொண்டிருந்ததாக யாரும் சொல்லவில்லை.

மனித உரிமைகளை எப்படியெல்லாம் மீறக்கூடாதோ, அவை அனைத்தையும் மீறிச் செயற்படுத்தி காண்பித்தனர் புலிகள். விடுதலை என்றால் என்னவென்று தெரியாத, படிக்காத, படிக்க விரும்பாத நபர்கள் எல்லாம் ஆட்சி செய்யப் புறப்பட்டால் வாழும் வீட்டுக்குள் மிருகங்கள் போல் மலம் கழிக்கத்தான் வேண்டும். தமிழ் இனத்துக்கு பெருமை என்று நினைத்தவர்கள் பலர். ஆனால் நடந்தவை சிறுமைகள் என்பது யாருக்கும் தெரியாத விடயமாகும்.

(தொடரும்…)

குறிப்பு – சிறிய திருத்தம்:- ***கடந்த 01-04-2010 அன்று வெளிவந்த பாகம் 25 ல் நாவாந்துறை கோவில் திருவிழா 29-04-1996 என்று வெளிவந்துள்ளது. அது தவறானது. தட்டெழுத்துப் பிழையின் காரணமாக நடந்தது. 29-04-1986 என்பதே சரியானதாகும்.***)

**ஆணை இட்ட அதிபர் 'கை', வேட்டு வைத்த ஜெனரல் 'துப்பாக்கி' ….. யார் வெல்வார்கள்?**

(சாகரன்)

**சம்பந்தரே! உங்களிடம் சில சந்தேகங்கள்.**

(சேகர்)

**அனைத்து இலங்கைத் தமிழர்களும் ஒற்றுமையான இலங்கை தமது தாயகம் என மனப்பூர்வமாக உரிமையோடு உணரும் நிலை ஏற்பட வேண்டும்.**

(அ. வரதராஜப்பெருமாள்)

***தொடரும் 60 வருடகால காட்டிக் கொடுப்பு***

**ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் பாடம் புகட்டுவார்களா?**

(சாகரன்)

***ஜனவரி இருபத்தாறு!***

**விரும்பியோ விரும்பாமலோ இரு கட்சிகளுக்குள் ஒன்றை தமிழ் பேசும் மக்கள் தேர்ந்தெடுக்க வேண்டும்…..?**

(மோகன்)

**2009 விடைபெறுகின்றது! 2010 வரவேற்கின்றது!!**

***'ஈழத் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் பாசிசத்தின் உதிர்வும், ஜனநாயகத்தின் எழுச்சியும்'***

(சாகரன்)

***சபாஷ் சரியான போட்டி.***

**மகிந்த ராஜபக்ஷ Vs சரத் பொன்சேகா.**

(யஹியா வாஸித்)

**கூத்தமைப்பு கூத்தாடிகளும் மாற்று தமிழ் அரசியல் தலைமைகளும்!**

(சதா. ஜீ.)

***தமிழ் பேசும் மக்களின் புதிய அரசியல் தலைமை***

மீண்டும் திரும்பும் 35 வருடகால அரசியல் சுழற்சி! தமிழ் பேசும் மக்களுக்கு விடிவு கிட்டுமா?

(சாகரன்)

கப்பலோட்டிய தமிழனும், அகதி (கப்பல்) தமிழனும்

(சாகரன்)

*சூரிச் மகாநாடு*

(பூட்டிய) இருட்டு அறையில் கறுப்பு பூனையை தேடும் முயற்சி

(சாகரன்)

பிரிவோம்! சந்திப்போம்!! மீண்டும் சந்திப்போம்! பிரிவோம்!!

(மோகன்)

***தமிழ் தேசிய கூட்டமைப்புடன் உறவு***

**பாம்புக்கு பால் வார்க்கும் பழிச் செயல்**

(சாகரன்)

**இலங்கை அரசின் முதல் கோணல் முற்றும் கோணலாக மாறும் அபாயம்**

சாகரன்

**ஈழ விடுலைப் போராட்டமும், ஊடகத்துறை தர்மமும்**
- சாகரன்

*அடுத்த கட்டமான அதிகாரப்பகிர்வு முன்னேற்றமானது 13வது திருத்தத்திலிருந்து முன்னோக்கி உந்திப் பாயும் ஒரு விடயமே*

- அ.வரதராஜப்பெருமாள்

***மலையகம் தந்த பாடம்***

வடக்கு கிழக்கு மக்கள் கற்றுக்கொள்வார்களா? - சாகரன்

*ஒரு பிரளயம் கடந்து ஒரு யுகம் முடிந்தது போல் சம்பவங்கள் நடந்து முடிந்துள்ளன.!* - அ.வரதராஜப்பெருமாள்

**அமைதி சமாதானம் ஜனநாயகம்**
www.sooddram.com